දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA
තැ.පෙ.43/தபால் பெட்டி 43 /P.O.Box 43
පරණ ගලහ පාර, පේරාදෙණිය, ශ්‍රී ලංකාව
பழைய கலகா வீதி, பேராதனை, இலங்கை
Old Galaha Road, Peradeniya, Sri Lanka

මගේ අංකය: } ඔබේ අංකය: }
எமது இலக்கம்: உமது இலக்கம்:
My Ref: Your Ref:

05-02-2024

தொடர் தொலைக்கல்வி நிலைய வெளிவாரி பழைய பாடத்திட்டப் பட்டதாரிகளின் கவனத்திற்கு,

**பட்டமளிப்பு விழா (வெளிவாரி) – 2023**

**அன்பார்ந்த பட்டதாரிகளே.**

1) 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் மற்றும் 2022 ஜனவரி மாதம் நடைபெற்ற கலைமாணி (BA) (வெளிவாரி) பழைய பாடத்திட்ட பரீட்சையில் தோற்றி சித்தி அடைந்த பரீட்சார்த்திகள் மற்றும் 2022/2023 கல்வியாண்டுகளின் கலைமாணி (BA) (வெளிவாரி) புதிய பாடத்திட்டத்தில் சித்தி அடைந்த பரீட்சார்த்திகள் மற்றும் 2020/2021 கல்வியாண்டுகளில் வியாபார நிர்வாகமாணிப் பரீட்சையில் (BBA) (வெளிவாரி) தோற்றி சித்தி அடைந்த பரீட்சார்த்திகளுக்கான பட்டமளிப்பு விழா, **2024 ஏப்ரல் மாதம் 25ம் திகதி பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் மஹிந்த ராஜபக்ஷ மண்டபத்தில்** நடைபெறவுள்ளது.

2) இப்பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்குத் தகுதி பெற்ற உங்களது விபரங்களானது CDCE இணையதளத்தில் பதிவேற்றம் (Upload) செய்யப்பட்டுள்ள விண்ணப்படிவத்தில் உள்ளடங்கியுள்ளது. அவ்விண்ணப்பதைப் பதிவிறக்கம் (Download) செய்து விண்ணப்பத்தில் உள்ளடக்கிய விபரங்களில் திருத்தங்கள் இருப்பின் அவற்றைத் திருத்தி, விடயங்களைப் பூர்த்திசெய்து **(தற்போது நீங்கள் பயன்படுத்தும் சேவையிலுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியொன்றினைக் குறிப்பிடல் கட்டாயமானதாகும்.)** கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ***'CONVOCATION' (EXTERNAL)-2023*** எனக் குறிப்பிட்டு, ***Assistant Registrar, Centre for Distance and Continuing Education, University fo Peradeniya, No. 43, Old Galaha Road, Peradeniya.*** என்ற முகவரிக்கு ***28-02-2024*** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். (அத்துடன் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அச்சிடும்போது **A4** தாளின் இரு பக்கங்களிலும் அச்சிடவும்.)

**அத்துடன் CDCE இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள Google Form இணை நிரப்புதல் கட்டாயமானதாகும்.**

**Link:** https://forms.gle/xNYPygsvHn7mzi1y6

3) பட்டச் சான்றிதழுக்கான கட்டணம், பட்டமளிப்பு விழாவிற்கான கட்டணம் உள்ளடங்கலாக பட்டதாரிகள் செலுத்தவேண்டிய மொத்தக் கட்டணம் **ரூபா. 10,000/= ஆகும். இக்கட்டணத்தை பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளும்/கலந்துகொள்ளாத பட்டதாரிகள் அனைவரும் கட்டாயமாக செலுத்துதல் வேண்டும்.** இக்கட்டணத்தை பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலைய கணக்கிலக்கம் **057–1–001–4–1338036** ற்கு, மக்கள் வங்கி கிளையில் செலுத்தி, பெற்றுக்கொண்ட வங்கிச்சீட்டின் மூலப்பிரதியை ***(Original Cash Deposit Slip)*** விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் கட்டாயமாகும்.

❖ எதிர்காலத்தில் பட்டமளிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவித்தல்கள் எமது CDCE இணையதளம் மூலமாகவே (https://cdce.pdn.ac.lk/) அறிவிக்கப்படும். மற்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உமது தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியினூடாக உங்களுக்கான தகவல்கள் அறிவிக்கப்படும். அதனால் உங்களது தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாதிருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஜே.பி.வெஸ்லி
உதவிப் பதிவாளர்
தொடர்தொலைக்கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்.

දුරකථන/தொலைபேசி/Telephone :*0812388057*
ෆැක්ස්/ பெக்ஸ்/Fax : *0812389206* වෙබ් අඩවිය/இணையத்தளம்/Web site: www.pdn.ac.lk/cdce